தினமணி

## நுங்கு, குளிர்பான விற்பனை விலை கிடுகிடு உயர்வு

First Published : 18 Apr 2012 01:52:36 AM IST



கோப்புப் படம்

திருத்தணி, ஏப். 17: கோடை வெயில் வாட்டி எடுத்து வரும் நிலையில் உடல் உஷ்ணத்தை தணிக்கும் நுங்கு, குளிர்பானம் உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விற்பனையும், விலையும் கிடுகிடு என உயர்ந்துள்ளது.

÷கோடை காலங்களில் மக்கள் அதிகம் விரும்பும் பதநீர், நுங்கு, குளிர்பானங்கள் விற்பனை அதிகரித்து இருப்பதோடு, தட்டுப்பாடு காரணமாக விலை உயர்ந்துள்ளது.

÷கடந்த காலங்களில் கிராமப் பகுதியில் வறட்சியைத் தாங்கும் பனை மரங்கள் அதிக அளவில் இருந்தன. தற்போது, பல்வேறு காரணங்களுக்காக பனை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

÷திருத்தணியைச் சுற்றியுள்ள வேலஞ்சேரி, வீரகநல்லூர், செருக்கனூர், கே.ஜி.கண்டிகை, பட்டாபிராமாபுரம், வினியாகபுரம், மேதினிபுரம், சத்திரஞ்செயபுரம் உள்ளிட்ட கிராமங்களில் பரவலாக பனை மரங்கள் இருந்த போதும், கடந்த காலங்களை போல் பனை மரங்களைப் பராமரித்து பதநீர் இறக்கும் தொழிலில் ஈடுபடுவோர் எண்ணிக்கை அடியோடு குறைந்து விட்டது.

÷இதற்குக் காரணம் ஆண்டு முழுவதும் பனை மரங்களில் வருவாய் கிடைப்பதில்லை என்பதால், மாற்றுத் தொழிலுக்கு பலர் மாறி விட்டனர்.

÷தற்போது, கோடை காலம் தொடங்கிய நிலையில் குளிர்பானம், பனை நுங்கு விற்பனை சூடுப் பிடிக்க தொடங்கியுள்ளது. இத்தொழிலை நம்பியுள்ள பலர் தற்போது, பனை மரங்களில் இருக்கும் பனங்காய்களை வெட்டி, அதிலிருந்து நுங்குகளை தனியாகப் பிரித்து நகரில் பல பகுதிகளில் விற்பனை செய்து வருகின்றனர்.

÷கடந்த காலங்களில் ஒரு டம்ளர் பதநீர் ரூ.4-க்கு விற்பனை சொய்யப்பட்டது. தற்போது, ஒரு டம்ளர் ரூ.10-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

÷கடந்த ஆண்டு 5 பனை நுங்கு ரூ.10-க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது, 3 நுங்கு ரூ.10-க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிர்னிப்பழம், தர்ப்பூசணி ஆகியவை ரூ.40 முதல் 50 வரை விலை கிடுகிடு என உயர்ந்துள்ளது.

÷அதேபோல் லெமென், ஆரஞ்சு, பாதாம்கீர், ரோஸ்மில்க், பூரூட் ஜூஸ் உள்ளிட்டவை கடந்த ஆண்டு ரூ.3-க்கு விற்பனை செய்யப்பட்டது.

÷ஆனால் நடப்பு ஆண்டில் ரூ.5-க்கு மேல் விற்பனை செய்யப்படுகிறது.

÷அதேபோல் கரும்பு ஜூஸ், கிரேப் ஜூஸ், சாத்துக்குடி ஜூஸ், தர்ப்பூசணி ஜூஸ் உள்ளிட்ட பழவகை சாறுகளின் விலைகளும் அதிகமாகி ரூ.20-க்கு விற்பனை செய்யப்படுகிறது. ÷கடந்த காலங்களை போல் சைக்கிளில் நுங்குக் கட்டி விற்பனை செய்வோர் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது.

÷மொத்தமாக மூட்டைகளில் கட்டி வாகனங்கள் மூலம் திருத்தணி நகரத்துக்கு விற்பனை செய்ய கொண்டு வருகின்றனர். இதனால், போக்குவரத்து கூலி அதிகரிப்பதால், நுங்கு விலையும் அதிகரித்துள்ளது.

÷தேவைக்கு ஏற்ப உற்பத்தியில்லாமல் இருப்பதும் இதன் விலை ஏற்றத்துக்கு காரணமாக உள்ளது.

## தக்காளி பதப்படுத்தும் பயிற்சி

First Published : 17 Apr 2012 10:55:32 AM IST

கோவை, ஏப்.16: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், "தக்காளியைப் பதப்படுத்துதல்' குறித்த பயிற்சி ஏப்.24, 25 ஆகிய தேதிகளில் அளிக்கப்படுகிறது.

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,000 செலுத்தி பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம். நேரில் வந்து பெயரைப் பதிவு செய்து கொள்ள இயலாதவர்கள் பயிற்சிக் கட்டணத்தை வரைவோலை மூலமாக முதன்மையர், வேளாண் பொறியியல் கல்லூரி என்ற பெயரில், கோவையில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியில் பெறத்தக்க வகையில் எடுக்க வேண்டும்.

தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை - 641003 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். பதிவு செய்து கொள்ள ஏப்.23-ம் தேதி கடைசி நாளாகும். விவரங்களுக்கு 0422-6611268.

## தென்னை பராமரிப்பு: இளைஞர்களுக்கு இலவசப் பயிற்சி

First Published : 17 Apr 2012 10:53:39 AM IST

பொள்ளாச்சி ஏப். 16: மத்திய அரசின் தென்னை வளர்ச்சி வாரியம் மற்றும் பொள்ளாச்சி தொழில் வர்த்தக சபை ஆகியவை இணைந்து, தென்னை மரங்களைப் பராமரிப்பது குறித்து இளைஞர்களுக்கு இலவசப் பயிற்சி அளிக்கின்றன.

இது குறித்து பொள்ளாச்சி தொழில் வர்த்தக சபைத் தலைவர் ஜி.டி. கோபாலகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தென்னை மரங்களின் நண்பன் என்ற திட்டத்தின் மூலம், தென்னை மரங்களைப் பேணிக் காக்கவும், நவீன கருவிகளின் உதவியுடன் மரத்தில் ஏறவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் மூலம் கிராமப்புற இளைஞர்கள் நாளொன்றுக்கு ரூ.500 முதல் ரூ.1,000 வரை வருமானம் ஈட்டலாம்.

பொள்ளாச்சி நா.மு. சுங்கத்தில் உள்ள ஸ்ரீராம் கலை அறிவியல் கல்லூரியில், மே முதல் வாரத்தில் ஆறு நாட்கள் பயிற்சி முகாம் நடைபெறும். பங்கேற்பாளர்களுக்கு உணவு, தங்குமிடம் இலவசம். ஊக்கத்தொகையாக நாளொன்றுக்கு ரூ.100 முதல் ரூ.150 வரை வழங்கப்படும்.

பயிற்சியின் நிறைவாக தென்னை மரம் ஏறுவதற்கான இயந்திரம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சி நடைபெறும் நாட்களில் வெளியே செல்ல அனுமதி இல்லை.

பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த 18 முதல் 40 வயதுக்கு உள்பட்ட இளைஞர்கள், சிறு,குறு தென்னை விவசாயிகள் மற்றும் பெண்கள் இதில் கலந்து கொள்ளலாம். தமிழில், எழுத, படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

விருப்பமுள்ளவர்கள், 2 புகைப்படங்கள், அடையாள அட்டை, குடும்ப அட்டை மற்றும் உடல் தகுதிச் சான்றிதழுடன் ஏப்ரல் 20-ம் தேதிக்குள் பொள்ளாச்சி தொழில் வர்த்தக சபை, 23-24 காமராஜர் ரோடு, மகாலிங்கபுரம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி எண்கள்: 04259- 223132, 99655-23132.

ஏற்கெனவே கேரளாவில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தென்னை அதிகமாக பயிரிடப்படுவதால், தமிழ்நாட்டில் முதன்முறையாக பொள்ளாச்சி பகுதியில் அறிமுகம் செய்யப்படுகிறது.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## ஜாதிக்காய் சாகுபடி

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2012,00:00 IST



பசுமை மாறாத தாவர வகையைச் சார்ந்தது ஜாதிக்காய் மரம். அடர்ந்த இலைப் பரப்புகளைக் கொண்டு இருபது மீட்டர் உயரம் வரை வளரும் தன்மை உடையது. ஆண்டுச்சராசரி மழை அளவு 150 செ.மீ. மற்றும் அதற்கு மேலாகக் கிடைக்கும் கதகதப்பான ஈரப்பதம் உள்ள சூழலில் ஜாதிக்காய் மரம் நன்கு வளரும். கடல் மட்டத்திலிருந்து 1,300 மீட்டர் உயரம் வரை உள்ள பகுதிகள் இதற்கு ஏற்ற சூழ்நிலை ஆகும். பாக்குத் தோப்புகளில் ஊடுபயிராக இடுவது சிறந்தது. களிமண் கலந்த இருமண்பாடு கொண்ட மண், மணல் கலந்த இருமண்பாடு கொண்ட மண், செவ்வரி மண் பகுதிகள் இதற்கு நல்லதாகும். தென்னைக்கு இடையே ஊடுபயிராக வளர்ப்பதும் நல்லதாகும். 60செ.மீ. கள செவ்வகக்குழி எடுத்து அதனுள் 10 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் மற்றும் மேல் மண்ணை இட்டு, பின்னர் ஜாதி மரக்கன்றுகளை நடவு செய்தல் சிறந்தது. முழு வளர்ச்சியடைந்த ஜாதிக்காய் மரத்திலிருந்து ஆண்டுக்கு 100 முதல் 2000 பழங்கள் வரை கிடைக்கும்.

வாழை மற்றும் காய்கறி விவசாயத்தின் ஊடேயும் ஜாதிக்காய் பயிர் செய்யப்படுகிறது. நட்ட ஆறு முதல் ஏழு வருடங்களில் ஜாதிக்காய் மரம் பூக்கத் தொடங்கும். 50 வருடங்கள் வரை காய்த்து பலன் தரும். ஒரு ஜாதிக்காய் தோட்டத்தில் ஐம்பதிற்கும் மேற்பட்ட பெண் மரங்களையும் ஓர் ஆண் மரத்தையும் உடையதாக இருக்கும். ஜாதிக்காய் மூன்று பருவங்களில் அறுவடை செய்யப் படுகிறது. பொதுவாக ஒரு மரம் அதன் வயதைப் பொறுத்து 100 கிலோ ஜாதிக்காயையும், 10

கிலோ ஜாதி பத்திரியையும் உற்பத்தி செய்ய வல்லது. ஜாதிக்காயைப் பதப்படுத்தும் தொழில் பொதுவான இடத்தில் வைத்து மிகக் கவனத்துடன் மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக பயன்படுத்தப்படும் தண்ணீரின் தன்மையும் அளவும்கூட கவனத்தில் கொள்ளப்படுகின்றன. ஜாதிக்காய் சுமார் 6-8 வாரம் வரை காயவைக்கப்படுகிறது. மூன்று ரகங்களாகப் பிரிக்கப்படும் ஜாதிக்காயின் முதல் ரகம் சமையல் தேவைகளுக்காகவும், மற்ற ரகங்கள் உணவைப் பாதுகாக்கும் பொருட்களைத் தயாரிக்கவும், அழகு சாதனப் பொருட்களை உண்டாக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

ஜாதிக்காயின் ஓட்டின் மேல் சிவந்தும் மெல்லியதாகவும் உள்ள தோல் போன்று படர்ந்து உள்ளது ஜாதிபத்திரி ஆகும். மசாலா பண்டங்களில் இதுவும் இடம்பெறுகிறது. பீடாவில் இதனையும் சேர்த்து சிறப்பிப்பது உண்டு. ஜாதிக்காயில் உள்ள நறுமண எண்ணெய் மருத்துவப் பண்புகளைக் கொண்டதாகும். வயிற்றுப்போக்கு, சீதளபேதி, வயிற்றுவலி, மலேரியா போன்ற நோய்கள் குணமாவதற்கும் இந்த எண்ணெய் பயன்படுகிறது. தாது விருத்தியாகவும் இது செயல்படுகிறது. சமையலிலும் மருத்துவத்திலும் மிகச் சிறப்பான இடத்தை இது பெற்று வருகிறது. இது பல்வலி, வாதநோய் ஆகிய சிக்கல்களை நீக்கும் ஆற்றல் உடையது.

ஜாதிக்காய், ஜாதிபத்திரி ஆகியவற்றின் பெருவணிக ஏற்றுமதியாளர்களாக இந்தோனேஷியாவும் கிரெனடாவும் இன்றளவும் இருந்து வருகின்றன. கிரெனடாவின் தேசியக் கொடியில் ஜாதிக்காய் சின்னமாகக் குறிப்பிடும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது.எஸ்.நாகரத்தினம்,56, லட்சுமி காலனி, கச்சேரி ரோடு,விருதுநகர்.

## ஓங்கோல் பகுதியில் கொண்டைக்கடலையில் இயந்திர சாகுபடி

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2012,00:00 IST



கொண்டைக்கடலை சாகுபடியில் கீழ்க்கண்டபடி லாபம் கிடைக்கிறது.

ஏக்கர் சாகுபடி செலவு - ரூ.பை

நிலம் தயாரிப்பு, உரமிடல்,

விதைப்பு முதலியன - 2,000.00

உரமிடல், களை,

பயிர் பாதுகாப்பு முதலியன - 2,000.00

அறுவடை முதலியன - 2,000.00

மொத்த செலவு - 6,000.00

ஏக்கர் மகசூல் 10 குவிண்டால்

ஒரு குவிண்டாலுக்கு

கிடைத்த விலை - 3,500.00

10 குவிண்டால் விலை - 35,000.00

சாகுபடி செலவு (ரூ.6,000) போக

வரவு - 29,000.00

ஓங்கோல் பகுதியில் எருதுகளை வைத்துக்கொண்டு விவசாயம் செய்ய இயலாத இப்பகுதியில் கூலி ஆட்கள் கிடைப்பதே இல்லை. ஆனால் சாகுபடி செய்வதற்கு அதிக பரப்பளவு உள்ளது. அதிக பரப்பு சாகுபடி செய்ய விவசாயிகளால் இயலுவதில்லை. ஓங்கோல் பகுதியில் விவசாயத்தை இயந்திரங்களைக் கொண்டு சாகுபடி செய்வது அவசியமாகின்றது. இங்கு நிலங்கள் கடுமையான களிமண்ணினைக் கொண்டுள்ளது.

பயறு வகைப்பயிரான கொண்டைக் கடலையை அதிகப் பரப்பளவில் சாகுபடி செய்ய டிராக்டர்கள் அதிகம் தேவைப்படுகின்றன. களிமண் நிலங்களில் பூமியில் மழை, ஈரம் தாங்க ஆழமாக உழவேண்டியது மிகவும் அவசியமானது.

இப்பணியை சிறப்பாக செய்வதற்கு டிராக்டர்கள் இழுக்கும் முறக்கலப்பைகள் உதவுகின்றன. அடுத்து பூமியில் விதைக்கும் விதையை சீராக முளைக்க வைக்க பூமியை சிறு கட்டிகளாக இருக்கும்படி உழவேண்டும்.

நிலத்தினை பொடியாகும்படி உழக்கூடாது. சிறு கட்டிகள் இருந்தால்தான் விதைகள் சீராக முளைக்கும். நிலம் பொடியாக இருந்தால் விதைகள் ஆழத்தில் புதைந்துவிடும். அதனால் முளைப்பு சதவீதம் மிகவும் குறைந்துவிடும். (கொண்டைக்கடலை விதை பருமனாக மற்றும் எடையோடு இருக்கும்) அடுத்தபடியாக பயிர் அறுவடைக்கும் கருவிகள் தேவைப்படுகின்றது.

தற்போது அறுவடைக்கு பெரிய அறுவடை இயந்திரங்கள் உதவுகின்றன. பொதுவாக இயந்திர சாகுபடியில் இரண்டு நன்மைகள் கிட்டுகின்றன.

1. அதிகப் பரப்பளவில் சாகுபடி செய்யலாம்.


2. இயந்திர சாகுபடியில் அதிக அளவு மகசூல் கிட்டுகின்றது.

**உழவர் விழா:** ஆந்திரா பகுதி ஓங்கோலில் பிப்ரவரி 25ம் தேதி (25.2.2012) ஒரு உழவர் விழா நடந்தது. விவசாய கல்லூரி பாபட்லா மற்றும் லாம் பாம் குண்டூர் இவைகளைச் சேர்ந்த தலைசிறந்த விவசாய விஞ்ஞானிகள் விழாவில் கலந்துகொண்டனர். இந்த விழாவில் நெல் சாகுபடி, பருத்தி சாகுபடி, பயறு வகைகள் இவைகளைப் பற்றி விஞ்ஞானிகள் விவசாயிகளுடன் கலந்துரையாடல் செய்துகொண்டிருந்தனர்.

இந்த விழாவில் கொண்டைக் கடலை பற்றியும் விஞ்ஞானிகள் பேசினர். ஓங்கோலைச் சேர்ந்த விவசாயி சிவசாம்பி ரெட்டியை அவர் பயறு வகைப் பயிரில் செய்துள்ள சாதனைக்காக விஞ்ஞானிகள் பொன்னாடை போர்த்தி கவுரவித்தனர். சிவசாம்பி ரெட்டி பாராட்டை ஏற்றுக்கொண்டு விவசாயிகளை பயறு வகைப் பயிர்களின் மகசூலினை அதிகரித்து தாங்கள் பயன் பெறுவதோடு பயறுவகைப் பயிர் உற்பத்தியில் தன்னிறைவுபெற நாட்டிற்கு உதவ வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இதற்காக விவசாய விஞ்ஞானிகள் நமக்கு உதவ காத்துக் கொண்டு இருக்கின்றனர். எனக்கு விருது அளித்த விஞ்ஞானிகளுக்கு நான் நன்றி சொல்வதோடு நீங்களும் இந்த விஞ்ஞானிகளை அணுகி உற்பத்தியை பல மடங்கு அதிகரிக்க அறிவுரைகள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.-எஸ்.எஸ்.நாகராஜன்.

## நவீன தொழில்நுட்பம்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2012,00:00 IST



**கோரியஸ் கிழங்கு - மருந்து கூர்கன் ஒப்பந்த சாகுபடி திட்டம்**: ஓமவல்லி குடும்பத்தைச் சேர்ந்த மூலிகைச்செடி. இது நெருக்கமான கிளைகளில் தடிம னான இலைகளுடன் சுமார் 2 அடி உயரம் வரை வளர்கிறது. இச்செடி நுனிக்கொழுந்தைக் கிள்ளி நட்டு வளர்க்கப்படுவதால் ஆணிவேர் உண்டாவதில்லை. அடிக் கணுக்களிலிருந்து பக்க வேர்களே உண்டாகின்றன.
பழுப்புநிற வேர்களிலிருந்து ஒல்லியான கோட் வடிவத்தில் ஒரு அடி நீளம் வரை கிழங்குகள் உருவாகின்றன. ஒரு செடியிலிருந்து அரை கிலோ முதல் 3/4 கிலோ வரை பச்சைக்கிழங்குகள் கிடைக்கின்றன. சுயவளம் மிகுந்த பொலபொலப்பான பூமிகளில் 1 கிலோவும் கிடைக்கிறது. பாஸ்கோலின் என்ற வேதிப்பொருள் கோலியஸ் கிழங்கில் இருக்கிறது. இது ரத்த அழுத்தத்தைச் சீர்செய்து இதயப்பளுவைக் குறைக்கிறது. ஆஸ்துமா, புற்றுநோய், கிளாகோமா நோய்களைக் குணப்படுத்தும் மருந்துகளில் முக்கிய மூலப் பொருளாக செயல்படுகிறது. ஆறே மாதங்களில் **அதிக வருமானம் பெறலாம். பருவம்**: சிறப்புப்பட்டம் - சித்திரை, வைகாசி, ஆனி. இயல்பு பட்டம் - ஆவணி, புரட்டாசி, ஐப்பசி. சிறப்புபட்டம்-2 - கார்த்திகை, மார்கழி, தை. செம்மண், சரளை மணல் கலந்த மண், செம்பொறை மண், களியற்ற கரிசல், நல்ல வடிகால் வசதி வேண்டும். நடவு: பாருக்கு பார் 2 அடி, செடிக்கு செடி 1 அடி, அடி யுரம், மேலுரம் சிபாரிசுப்படி 50வது நாள் - கோலியஸ் வளர்ச்சி உரக் கலவை; 100வது நாள் - கோலியஸ் நுண்ணூட்டக் கலவை; 150வது நாள் - கோலியஸ் நுண்ணூட்டக் கலவை 10லி/ஏக்கர்.
**நீர் நிர்வாகம்:** மாதம் 3 முறை நீர் பாய்ச்ச வேண்டும். சாகுபடி செலவு ரூ.20,000 முதல் 25,000 வரை. **மகசூல்**: குறைந்தபட்சம் 3-5 டன் முதல் அதிக பட்சம் 8-10 டன் வரை. அறுவடை: நிர்வாகத்தின் களப்பணியாளர் உத்தரவின்பேரில் கிழங்குகளை அறுவடை செய்து நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும். கொள்முதல் - நடப்பு ஆண்டில் கோலியஸ் கிழங்கு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.12,000 கொள்முதல் விலை வழங்கப்படும். **சாகுபடி விபரங்களுக்கு தொடர்புகொள்ள**: வீர.எஸ்.சரவணலிங்கம், திட்ட அதிகாரி, 93675 32887. திட்ட ஒருங்கிணைப்பாளர் டி.எஸ்.கே.ராமலிங்கம், 94420 31045, 89256 45009. களப்பணியாளர்கள்: டி.சதீஷ் கண்ணன், 99429 19059. ஏ.வெங்கடேசன் 97889 92322, பி.சவுந்திரபாண்டியன் 99428 59566, எஸ்.வி.எம்.ஏ. கிரீன் பிளாண்டேஷன்ஸ் (பி) லிட், 2/465-2, வேதாத்திரி நகர், திண்டுக்கல்-624 004.

**சூரிய மின் உலர் கலன்:** பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, பொள்ளாச்சி, உடுமலை, தாராபுரம், காங்கேயம் பகுதிகளில் கொப்பரைத் தேங்காய் காயவைக்க படாதபாடு படுகிறார்கள். இதற்காக உருவாக்கப்பட்டதுதான் இந்த சோலார் டிரையர்.
மண்ணெண்ணெய், டீசல் போன்ற எரிபொருள் எதுவும் தேவையில்லை. மின்சாரமும் தேவையில்லை.
இஸ்ரேல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தெர்மல் ஷீட் உதவியுடன் நமது தேவைக்

கேற்ப மாட்டுவண்டி கூண்டுபோல் வடிவமைத்து தருகிறது கோவை ரெணி நிறுவனம். இந்த கூண்டிற்கு வெளியே 35 டிகிரி செல்சியஸ் உஷ்ணநிலை நிலவினால் அதே உஷ்ணம் கூண்டிற்குள் ஊடுருவும்போது கூண்டிற்குள் 60 டிகிரி செல்சியஸ் நிலவும். இதனால் கூண்டிற்குள் பரப்பப்பட்டிருக்கும் தேங்காய்த் துண்டுகள் கொப்பரைத் தேங்காய் துண்டுகளாக உலர்கின்றன. இதனால் உலரவைக்கும பணி மிகவும் எளிதாகிறது. இதில் எதை வேண்டுமானாலும் உலரவைக்கலாம்.

12 அடி து 20 அடி என்கிற அளவில் உலர்கலவை அமைக்க ரூ.72,000/- செலவாகிறது. தேங்காய் மற்றும் இதர வேளாண் விளைபொருட்களை உலரவைக்கும்போது 100 சதம் பூஞ்சாண நோய் தாக்குதலின்றி பொருட்கள் கிடைப்பதுடன் 3 நாட்களிலேயே முழுமையாக அவை உலர்ந்துவிடுகின்றன. வேளாண் விளைபொருட்களான திராட்சை, மிளகாய், கறிவேப்பிலை, முருங்கைக்காய், சேமியா, ஜவ்வரிசி, நூடுல்ஸ் போன்றவை காயவைக்கலாம். கோழித்தீவனம் தயாரிப்பு நிறுவனங்களுக்கு இது மிகவும் உபயோகமான உபகரணம். **மேலும் விபரங்களுக்கு:** ரெணி அக்ரோ அண்ட் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட், 338/3சி3, ஸ்ரீ வெங்கடேஸ்வரா இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், எல்லைத்தோட்டம் மெயின்ரோடு, பீளமேடு, கோயம்புத்தூர். 98421 77225, 98420 17714.-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

## முட்டை விலை 225 காசு

ஏப்ரல் 18,2012,00:03



நாமக்கல்:தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 225 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை, இரு தினங்களாக ஏற்றம் கண்டு வருவது, கோழிப்பண்ணையாளர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 220 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஐந்து காசுகள் உயர்த்தி, 225 காசுகளாக நிர்ணயம்

செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை, இரு தினங்களாக ஏற்றம் கண்டு வருவது, கோழிப்பண்ணையாளர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விவரம்: சென்னை, 227 காசு, பெங்களூரு, 225 காசு, மைசூர், 210 காசு, ஐதராபாத், 200 காசு, மும்பை, 230 காசு, விஜயவாடா, 200 காசு, கோல்கட்டா, 228 காசு, பார்வாலா, 204 காசு, டில்லி 220 காசு.

நாமக்கல்லில் நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 35 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 58 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## அதிக லாபம் தரும் காடை வளர்ப்பு விவசாய முகாமில் ஆலோசனை

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2012,03:34 IST

கருத்தை பதிவு செய்ய

தாம்பரம் : விவசாயிகள், மகளிர் சுய உதவிக்குழுக்களை சேர்ந்த பெண்கள், சிறிய இடத்தில் அதிக லாபம் தரும் காடை, மீன், காளான் வளர்ப்பு தொழில்களில் ஈடுபடலாம் என, வேளாண்மை துறை அதிகாரிகள் கூறினர்.

தாம்பரத்தை அடுத்த முடிச்சூர் ஊராட்சியில், உழவர் பெருவிழா மற்றும் விழிப்புணர்வு முகாம் நடந்தது.

விவசாயம் குறைந்தது

இதில், விவசாயிகள், மகளிர் சுய உதவிக்குழுக்களை சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு விவசாயம், தோட்டக்கலை, வேளாண்மை அறிவியல் நிலையம், வேளாண்மை வணிகம் மற்றும் விற்பனைத் துறை என, பல துறைகளை சேர்ந்த அதிகாரிகள் செயல்முறை விளக்கம் தந்தனர்.

முடிச்சூர் பகுதியில் ஒரு காலத்தில், 200 ஏக்கர் பரப்பளவில் விவசாயம் நடந்து வந்தது. தற்போது, 50 ஏக்கருக்கும் குறைந்த அளவிலேயே நடந்து வருகிறது. இதனால், விவசாயம் செய்ய முடியாதவர்கள், குறைந்த இடத்தில் விவசாயம் சார்ந்த தொழில்களை செய்து அதிக லாபத்தை ஈட்டலாம் என, அதிகாரிகள் ஆலோசனை தந்தனர்.

அதிக லாபம்

காடை வளர்ப்பு தொழில் செய்ய, 10 சதுர அடி இடம் போதும். ஒரு சதுர அடியில் ஆறு காடைகளை வளர்க்கலாம். இந்த வகையில், ஒரு வீட்டில், 500 முதல் 600 காடைகளை வளர்க்க முடியும். ஆறு வாரத்தில் இவை பெரியதாகி, ஒரு காடையின் விலை 35 ரூபாய் வரை விற்பனை செய்யலாம்.

மகளிர் சுய உதவிக்குழுக்களை சேர்ந்த பெண்கள், இத்தொழிலில் ஈடுபட்டால் அதிக லாபத்தை

பெற முடியும். இதேபோல், மீன், காளான் வளர்ப்பு தொழிலிலும் ஈடுபடலாம் என்றும், முகாமில் தெரிவிக்கப்பட்டது.
இதில் ஆர்வமுள்ளவர்கள், காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலையத்தை, 27452371 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு விவரம் பெறலாம்.

## விவசாயிகளுக்கு முன்பருவ பயிர் சாகுபடி பயிற்சி

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2012,04:04 IST

கருத்தை பதிவு செய்ய

திருவள்ளூர் : விவசாயிகளுக்கு முன்பருவ பயிர் சாகுபடி பயிற்சி முகாம் நேற்று நடந்தது.
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும், திரூர் வேளாண் அறிவியல் மையத்தில், உழவர் பெருவிழாவை முன்னிட்டு, திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில், முன்பருவ பயிர் சாகுபடி பயிற்சி முகாம் நேற்று நடந்தது.
வேளாண் அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் தேவநாதன் பயிற்சி முகாமை துவக்கி வைத்து, பயிர்களில் ஒருங்கிணைந்த நோய் நிர்வாகம் பற்றி சிறப்புரையாற்றினார்.
மேலும், வேளாண் அறிவியல் மைய முனைவர் முத்துராமலிங்கம், காய்கறி பயிர்களில் துல்லிய பண்ணையம் பற்றியும், முனைவர் மணிமாறன் திருந்திய நெல் சாகுபடி பற்றியும், முனைவர் யோகலஷ்மி விதை நேர்த்தி மற்றும் விதை உற்பத்தி தொழில்நுட்பம் பற்றியும், முனைவர் நிர்மலாதேவி வேளாண்மை
அறிவியல் நிலைய செயல்பாடுகள் பற்றியும், முனைவர் சுமதி ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம் மற்றும் தொழில்நுட்பம் பற்றியும் விளக்கினர்.
இப்பயிற்சி முகாமில், மாவட்டத்தில் உள்ள, 14 ஒன்றியங்களில் இருந்து, 80 விவசாயிகள் பங்கேற்றனர்.

## விவசாயிகள் குறைகேட்பு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2012,00:48 IST

கருத்தை பதிவு செய்ய

விழுப்புரம் : விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் வரும் 20ம் தேதி விழுப்புரத்தில் நடக்கிறது.
விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் வரும் 20ம் தேதி காலை 11 மணிக்கு கலெக்டர் சம்பத் தலைமையில் நடக்கிறது. விவசாய சங்க

பிரதிநிதிகள் விவசாயம் தொடர்பான குறைகளை தெரிவித்து பயன் பெறலாம் என கலெக்டர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## செம்மேடு சர்க்கரை ஆலையில் நவீன தொழில் நுட்ப பயிற்சி

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2012,00:45 IST

கருத்தை பதிவு செய்ய

செஞ்சி : செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க் கரை ஆலையில் கரும்பு விவசாயிகளுக்கு நவீன தொழில் நுட்ப பயிற்சி முகாம் நடந்தது.

செஞ்சி அடுத்த செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் நவீன தொழில் நுட்பத்தில் கரும்பு சாகுபடி குறித்து விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது. சர்க்கரை ஆலை துணை தலைவர் கிருஷ்ணன் முகாமை துவக்கி

வைத்தார்.பொது மேலாளர் பழனிவேல், இணை பொது செயலாளர் லட்சுமணன், உதவி பொது மேலாளர்கள் விஜயகுமார், பாஸ்கர் தாஸ், மாவட்ட வேளாண் இணை இயக்குனர் அன்பழகன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

விவசாயிகளுக்கு நவீன கரும்பு சாகுபடி முறையில் அகலபார் நடவு, செம்மை கரும்பு சாகுபடி, சொட்டு நீர் பாசனம், களை நிர்வாகம் பூச்சி, நோய் கட்டுப்படுத்தும் முறை குறித்து ஆலையின் பல்வேறு துறைகளை சேர்ந்த வல்லுநர்கள் விளக்கினர்.

முன்னோடி விவசாயிகளின் வயல்களுக்கு விவ சாயிகளை அழைத்து சென்று உழவு கருவிக ளின் செயல்பாடுகளை விளக்கினர். இதில் பங்கேற்ற விவசாயி களுக்கு பயிற்சி சான்றிதழ் வழங்கப் பட்டது.

## கோடை வெயிலால் வெற்றிலையில் நோய் தாக்குதல்! : உற்பத்தி குறைவால் விலை உயர்வு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2012,02:07 IST

கருத்தை பதிவு செய்ய

ஆத்தூர் :ஆத்தூர் சுற்றுவட்டார பகுதியில், கோடை வெயில் காரணமாக, வெற்றிலை பயிர்களில், நோய் தாக்கம் தீவிரமடைந்துள்ளது. அதனால், வெற்றிலை உற்பத்தி குறைந்து, விலையும் உயர்ந்துள்ளது.

ஆத்தூர், முல்லைவாடி, கடம்பூர், பைத்தூர், கூலமேடு, மஞ்சினி, பெத்தநாயக்கன்பாளையம், நரசிங்கபுரம், செந்தாரப்பட்டி, கூடமலை, தம்மம்பட்டி, கருமந்துறை, தும்பல், ஏத்தாப்பூர்,

வாழப்பாடி பகுதிகளில், 3,500 ஏக்கர் பரப்பளவில், வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில், கறுப்பு, வெள்ளை ரகம் வெற்றிலை அதிகளவில் பயிரிடப்படுகிறது. இங்கு விளையும் கறுப்பு ரக வெற்றிலை, காரம் மிகுந்து ருசியாக இருப்பதால் வரவேற்பு நன்றாக உள்ளது. இந்த வெற்றிலை, கோவை, கடலூர், சென்னை, விழுப்புரம், புதுச்சேரி, பெங்களூரு போன்ற நகரங்களுக்கு அதிகளவில் அனுப்பி வைக்கப்படுகிறது.
மேலும், கறுப்பு ரகத்தின், "பீடா' எனும் சக்கை வெற்றிலைகளை, ராஜஸ்தான், மஹாராஷ்டிரா போன்ற வெளி மாநிலத்துக்கும், வெள்ளை ரகம் வெற்றிலையை, பெங்களூரு, குஜராத் உள்ளிட்ட மாநிலங்களுக்கும் அதிகளவில் அனுப்பப்படுகிறது.
இந்நிலையில், இரு மாதங்களாக, கோடை வெயில் தாக்கம் அதிகரித்துள்ளதால், வாடல், செவட்டை, கொன்னை, சப்பாத்தி பூச்சி தாக்கத்தினால், வெற்றிலை பயிர் சாகுபடி பாதிப்புக்குள்ளாகி வருகிறது.
இந்நோய் தாக்கம் காரணமாக, வெற்றிலை வளர்ச்சி இல்லாமல் சுருண்டு காணப்படுகிறது. பருவ மழையின்மையால், ஏக்கருக்கு, 50 கவுலிக்கு பதிலாக, 20 கவுலிகளே விளைச்சல் உள்ளது. அதனால், ஆத்தூர் புது பஸ் ஸ்டாண்ட் அருகில் உள்ள வெற்றிலை மார்க்கெட்டுக்கு, வெற்றிலை வரத்து குறைந்துள்ளது. அதனால், விலை உயர்ந்துள்ளது.
மேலும், வெளிமாநிலத்தில் வெற்றிலை தேவை அதிகம் உள்ளதாலும், உள்ளூர்களில் கோவில், திருமண விழா போன்ற விசேஷ நிகழ்ச்சி நடந்து வருவதாலும், வெற்றிலை விலை உயர்ந்துள்ளது.

இதுகுறித்து, ஆத்தூர், ஏத்தாப்பூர் பகுதி வெற்றிலை விவசாயிகள் கூறியதாவது: வெற்றிலை பயிரில் செவட்டை, கொன்னை, வாடல் நோய் தாக்கமும், மின்தடையால் தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலை உள்ளது. கடந்தாண்டு, மாவுப்பூச்சி தாக்கம் போன்ற காரணங்களால், ஆத்தூர் பகுதியில் மட்டும், 500 ஏக்கருக்கு மேலான வெற்றிலை பயிர்கள் முற்றிலும் அழிந்தது.
தற்போது, வெயில் மற்றும் நோய் தாக்கத்தால், வெற்றிலை தீய்ந்து போன நிலையில் உள்ளது. ஒரு ஏக்கருக்கு, ஐந்து ஒத்து வரையிலான வெற்றிலை மகசூல் உள்ளது. இந்த வெற்றிலையை பறிக்கும் கூலித் தொழிலாளர்களுக்கு கூட கூலி வழங்க முடியாத நிலை இருக்கிறது. வெற்றிலை பயிர்கள் சேதத்துக்கு, அரசு நிவாரணம் வழங்குவதில்லை.
இவ்வாறு கூறினர்.
இதுகுறித்து ஆத்தூர் வெற்றிலை வியாபாரிகள் கூறியதாவது: பெங்களூரு, குஜராத், ராஜஸ்தான் மாநிலத்தில், பீடாவுக்கு பயன்படுத்தும் வெற்றிலைகளை, ஆத்தூரிலிருந்து அதிகளவில் அனுப்பப்படுகிறது. இங்கு கழிவு, சக்கை எனும் பீடா வெற்றிலை, ராஜஸ்தான் மாநிலத்தில் வரவேற்பு அதிகம்.
வெள்ளை ரக வெற்றிலை, ஒரு கவுலி (100 வெற்றிலை), 40 முதல், 50 ரூபாயும், ஒரு ஒத்து (60

கவுலி), 2,200 ரூபாயும், கறுப்பு ரக வெற்றிலை, ஒரு கவுலி, 50 முதல், 60 ரூபாயும், ஒரு ஒத்து, 3,000 முதல், 3,500 ரூபாயும் வரை விலை உள்ளது. பீடா, கழிவு (சக்கை) வெற்றிலை, ஒரு ஒத்து, 2,700 ரூபாய் வரை விலை உள்ளது.நோய் தாக்கத்தால், மகசூல் குறைந்துள்ளதால், வெற்றிலை விலையும் உயர்ந்துள்ளது. இவ்வாறு கூறினர்.

## பால் உற்பத்தியாளர்களுக்கு ஆதார கொள்முதல் தொகை

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2012,02:23 IST

ஈரோடு: திருப்பூர் மாவட்டம் முத்தூர் அருகே, செட்டியார்பாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில், உறுப்பினர் கல்வித்திட்ட முகாம் மற்றும் பால் உற்பத்தியாளர்களுக்கு ஆதார கொள்முதல் ஊக்கத்தொகை வழங்கும் விழா நடந்தது.
பால்வள கூட்டுறவு சங்க துணைப்பதிவாளர் சபாரெத்தினம் தலைமை வகித்து, பால் உற்பத்தியாளர்களுக்கு, 1.13 லட்சம் ரூபாய் ஆதரவு விலை கொள்முதல் ஊக்கத்தொகையை வழங்கி பேசியதாவது: மொத்த பால் உற்பத்தியில், 15 சதவீதம் மட்டும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. அதை அதிகப்படுத்த, பால் உற்பத்தியாளர்களுக்கு, அவர்கள் ஏற்கனவே வழங்கிய பாலுக்கு கடந்தாண்டு லாபத்துக்கு உபரியாக உள்ள தொகையை உறுப்பினர்களின் பால் உற்பத்தியை ஊக்கப்படுத்தும் வகையில், ஆதரவு கொள்முதல் விலையாக வழங்கப்படுகிறது.
இச்சங்கத்தின் மூலம், 2011 - 12ம் ஆண்டு உபரித்தொகையாக, 1.13 லட்சம் ரூபாய் உள்ளது. இதன் மூலம், 85 விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.
குறிப்பாக, ஒரு லிட்டருக்கு இச்சங்கம் மூலம் கூடுதலாக, 40 பைசா வழங்கப்படுகிறது. இதுபோல மாவட்டத்தில் உள்ள அனைத்து சங்கங்களும் ஊக்கத்தொகை வழங்கும்.
இவ்வாறு அவர் பேசினார். ஈரோடு மாவட்ட கூட்டுறவு ஒன்றிய பிரச்சார அலுவலர் ஆனந்தராஜ், முதுநிலை ஆய்வாளர்கள் அழகர்சாமி, மாணிக்கம் ஆகியோர் பேசினர். சங்க தனி அலுவலர் தங்கராஜ் வரவேற்றார். செயலாளர் வேலுசாமி நன்றி கூறினார்.

## நவீன கரும்பு அறுவடை மிஷின் செயல் விளக்கம்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2012,02:28 IST

அரியலூர்: மல்லூர் கிராமத்தில் நவீன கரும்பு அறுவடை மிஷின் செயல் விளக்க முகாம் நடந்தது. அரியலூர் மாவட்டம், திருமானூர் அருகே, சாத்தமங்கலம் கிராமத்தில் உள்ள கோத்தாரி சர்க்கரை

ஆலை சார்பில் வாங்கப்பட்டுள்ள நவீன கரும்பு அறுவடை மிஷின் செயல் விளக்க முகாம், வாரணவாசி அருகே மல்லூர் கிராமத்தில் உள்ள விஜயகுமார் என்பவரது வயலில் நேற்று நடந்தது.
நிகழ்ச்சிக்கு கோத்தாரி சர்க்கரை ஆலை துணை பொதுமேலாளர் ராமச்சந்திரன் தலைமை வகித்தார். மண்டல மேலாளர் ரவிக்குமார் வரவேற்றார்.

தலைமை நிர்வாகிகள் ராஜு, ஜோதிநாதன், கார்த்திகேயன், கோட்ட அலுவலர் கிருஷ்ணன், விவசாய பிரதிநிதிகள் மேலக்கருப்பூர் சுத்தரத்தினம், பாளையப்பாடி கண்ணதாசன், வாரணவாசி ராஜேந்தினர், வெங்கடகிருஷ்ணாபுரம் செங்கமுத்து, இலந்தைகூடம் பஞ்சாயத்து தலைவர் சுப்ரமணியன், குருவாடி ரவி உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர்.
நவீன கரும்பு அறுவடை இயந்திரத்தின் செயல்பாடு பற்றி, கோத்தாரி சர்க்கரை ஆலை மண்டல மேலாளர் ரவிக்குமார் விளக்கி கூறியதாவது: கரும்பு விவசாயிகள் தங்களது வயலில் சாகுபடி செய்துள்ள கரும்பை வெட்டி, சர்க்கரை ஆலைக்கு அனுப்புவதில் ஏற்படும் கால தாமதம் மற்றும் ஆள் பற்றாக்குறை ஆகியவற்றை கருத்தில் கொண்டு, கரும்பு விவசாயிகளின் வேண்டுகோளுக்கு இணங்க, நவீன வடிவமைப்புடன், பிரேசில் நாட்டில் தயாரிக்கப்பட்ட, நவீன தொழில்நுட்ப திறன் கொண்ட, "நியு ஹாலண்ட் 8000' எனப்படும் கரும்பு அறுவடை மிஷின், சாத்தமங்கலம் கோத்தாரி சர்க்கரை ஆலை சார்பில் வாங்கப்பட்டுள்ளது.
இரண்டரை கோடி ரூபாய் செலவில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள, ஃபீல்டருடன் கூடிய இந்த கரும்பு அறுவடை செய்யும் மிஷின், ஆறடி அகலம் கொண்ட பாரில் சாகுபடி செய்துள்ள கரும்பு வயலில், அறுவடை பணிகளை மேற்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

விவசாய பணிக்கான ஆள் பற்றாக்குறை உள்ள இன்றைய கால கட்டத்தில், ஒரு ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கரும்பை, ஒரு மணி நேரத்தில் வெட்டி, அறுவடை செய்யும் திறன் கொண்டது இந்த மிஷின்.
இதற்கான வெட்டு கூலியாக டன் ஒன்றுக்கு 400 ரூபாய் மட்டுமே, விவசாயிகளிடமிருந்து வசூல் செய்யப்படுகிறது. ஒரு விவசாயி தனக்கு சொந்தமான, 10 ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்துள்ள கரும்பை, ஆட்கள் மூலம் வெட்டி சர்க்கரை ஆலைக்கு அனுப்ப, கிட்டத்தட்ட மூன்று மாத காலம் ஆகும்.
ஆனால், அதே பரப்பளவில் சாகுபடி செய்த கரும்பை, இந்த மிஷின் மூன்று நாட்களில் வெட்டி அறுவடை செய்து சர்க்கரை ஆலைக்கு கொண்டு வந்து சேர்த்து விட முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

**வேளாண் அலுவலர்கள் மெத்தனம் குளித்தலை விவசாயிகள் "குமுறல்'**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2012,01:55 IST

கருத்தை பதிவு செய்ய

குளித்தலை: விவசாயத்தில் நவீன தொழில்நுட்பங்கள் குறித்தோ, மானிய விலை கருவிகள் குறித்தோ வேளாண் அலுவலர்கள் வெளிப்படையாக தெரிவிக்க மறுப்பதாக குளித்தலை பகுதி விவசாயிகள் குற்றம்சாட்டுகின்றனர்.

குளித்தலை பகுதி முழுவதும் காவிரி டெல்டா பகுதியை சார்ந்ததாகும். இப்பகுதியில் நெல், க ரும்பு, வாழை, கோரை ஆகியØ வ விவசாயம் செய்து வருகின்றனர். விவசாயிகள் பயன்பெறும் வகையில், கரூர் மாவட்டம் குளி த்தலை அருகே தண்ணீர்பள்ளிØ ய தலைமையிடமாக கொண்டு வேளாண் உதவி இயக்குனர் அலுவலகம் இயங்குகிறது.

தமிழக அரசின் வேளாண்து றை மூலம் விவசாயிகளுக்கு புதி ய தொழில்நுட்பம், மானிய விØ லயில் கருவிகள், உரங்கள், மரக்கன்று வழங்குவது. விவசாயிகள் பயிரிட்ட பயிரில் மகசூல் அதிகரிக்க செய்யும் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்குவது வேளா ண் துறை அலுவலர்களின் பணி.

ஆனால் வேளாண் துறை அலுவலர்கள் விவசாயிகளை கண்டுக்கொள்வதில்லை.

விவசாயிகளுக்கு எவ்விதமான தகவல்களு ம் சொல்வதில்லை என்று விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதுகுறித்து ஒன்றிய மனித உரிமை இயக்க தலைவர் ரத்தினவேலு கூறியதாவது: குளித்தலை, தோகமலை பகுதியில் வேளாண் உதவி இயக்குனர் அலுவலகம் என்று வெறும் பெயரளவுக்கு மட்டுமே செயல்படுகிறது. தோகமலை யூனியன் பகுதியில், நெல், கரும்பு, வாழை மற்றும் கம்பு, சோளம், சூரியகாந்தி, மா, கொய்யா, சப்போட்டா, பூ வகைகள் சாகுபடி செய்யப்படுகிறது. சிறு, குறு விவசாயிகளுக்கு, விவசாயத்தில் வந்துள்ள நவீன தொழில்நுட்பங்கள் குறித்து, வேளாண் அலுவலர்கள் நேரில் வந்து விளக்கம் அளிப்பதில்லை.

வேளாண் துறைக்கு ஆதரவு வேண்டி, குறிப்பிட்ட பகுதியில் உழவர் மன்ற அமைப்பாளரை கொண்டு கூட்டம் நடத்திவிட்டு, சிறப்பாக சொல்லப்படுவதாக பொய்யான பிரச்சாரம் செய்து வருகின்றனர். மானிய விலையில் உரங்கள், கருவிகள், விதைகள் பெறுவதும் குறித்தும் வேளாண் அலுவலர்கள் வெளிப்படையாக தெரிவிக்காமல் மெத்தனமாக உள்ளனர்.

---

நடப்பு ரபி பருவத்தில் கோதுமை கொள்முதல் 15 சதவீதம் அதிகரிப்பு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி

நடப்பு ஏப்ரல் மாதம் துவங்கியுள்ள ரபி சந்தைப்படுத்துதல் பருவத்தில் இதுவரை கோதுமை கொள்முதல் முந்தை ஆண்டின் இதே கால அளவான 28 லட்சம் டன்னை காட்டிலும் 15.2 சதவீதம் அதிகரித்து 32.95 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இந்த தகவலை, உணவு தானிய கொள்முதல் மற்றும் விநியோகம் போன்றவற்றை நிர்வகித்து வரும் இந்திய உணவு கழகம் வெளியிட்டுள்ளது.

பருவம் தவறிய மழை, நீடித்த குளிர் காலம் அதனால் பின் தங்கிய அறுவடை போன்ற காரணங்களால் பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களிலிருந்து தானிய வரத்து தாமதமானதாக கூறப்படுகிறது.

முந்தைய பருவத்தில் 2 லட்சம் டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்ட பஞ்சாப் மாநிலத்திலிருந்து நடப்பு காலத்தில் கொள்முதல் 28,000 டன் குறைந்து போயுள்ளது.

அதே போல், ஹரியானா மாநிலத்தில் கொள் முதல் முந்தைய பருவ அளவான 12.18 லட்சம் டன்னிலிருந்து 42 சதவீதம் குறைந்து 6.98 லட்சம் டன்னாக குறைந்துள்ளது.

மாறாக, குஜராத் மாநிலத்தில் கொள்முதல் மூன்று மடங்கிற்கு மேல் அதிகரித்து 33,155 டன்னாகவும், மத்திய பிரதேச மாநிலத்தில் 70 சதவீதம் அதிகரித்து 24.07 லட்சம் டன்னாகவும், அதிகரித்துள்ளது.

உத்தர பிரதேசத்தில் 32,000 டன், ராஜஸ்தானில் 91,000 டன் கோதுமையும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

கோதுமை உற்பத்தியில் உலக அளவில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.

### *கடந்த மார்ச் மாதத்தில் பாமாயில் இறக்குமதி 29% சரிந்தது*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*கடந்த மார்ச் மாதத்தில், பாமாயில் இறக்குமதி எதிர்பார்ப்புகளை விஞ்சி 29 சதவீதம் சரிவடைந்துள்ளது. கச்சா பாமாயில் இறக்குமதி 22.5 சதவீதம் சரிவடைந்து 2.79 லட்சம் டன்னாக குறைந்த நிலையில், சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் இறக்குமதி 38.6 சதவீதம் குறைந்துள்ளது.*

*சமையல் எண்ணெய்*

*சமையல் எண்ணெய் பயன்பாட்டில் முதலிடத்தில் உள்ள நம் நாடு, இந்தோனேஷியா மற்றும் மலேசியா போன்ற நாடுகளிலிருந்து பாமாயிலையும், அர்ஜெண்டினா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளிலிருந்து சோயா எண்ணெயையும் அதிக அளவில் இறக்குமதி செய்து வருகிறது.*

*சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் மீதான ஏற்றுமதி வரியை அண்மையில் இந்தோனேஷியா குறைத்தது. இதன் மூலம் இந்தியாவில் சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் இறக்குமதி அதிகரித்து உள்நாட்டு உற்பத்தி பாதிப்படையும் என்பதால், சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் இறக்குமதி மீது மத்திய அரசு வரி விதிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும், 2012–13–ஆம் நிதி ஆண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் வரி விதிக்கப்படவில்லை. இதுபோன்ற சாதகமான நிலையிலும், விலை உயர்வு காரணமாக இறக்குமதி குறைந்து போனது.*

*சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் இறக்குமதி குறையும் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான் என்றாலும், கச்சா பாமாயில் இறக்குமதி எதிர்பார்ப்புகளை விஞ்சி குறைந்துள்ளதற்கும் விலை உயர்வே காரணமாகும்.*

*மலேசியாவில்...*

*மலேசியாவில் கச்சா பாமாயில் கையிருப்பு குறைந்து ஏற்றுமதி அதிகரித்த நிலையில், நம் நாட்டில் கச்சா பாமாயில் விலை 5 முதல் 10 சதவீதம் அதிகரித்தது என்பது குறிப்பிடத்தக்கது.*